பட்டது. சுருங்கச்சொல்லின், நூற்றாண்டு இறுதியில் கவிதை தெய்வ நம்பிக்கையை இழந்து, வாழ்க்கைச் சுமையின் சோகத்தையும், ஏமாற்றத்தையும், இவற்றிலிருந்து வெளிவரமுடியாத பரிதவிப்பு நிலையினையும் ''எந்த மயக்கப் பொருள்களையாவது உட்கொண்டு வாட்டும் சோகத்திலிருந்து தற்காலிகமாகவேனும் விடுபடமுடியாதா'' என்ற ஏக்கத்தையுமே பிரதிபலித்தது. இருபதாம் நூற்றாண்டுக்கவிதை எந்தத் திசையில் செல்லப் போகிறதோ என்று நம்முள் எழுகிறது ஒரு வினா.

உரைநடையைப் பொறுத்த வரை, கற்பனைக்கும் மனோதத்–துவத்துக்கும் முக்கியத்துவம் அளித்த நிலை மாறி, வாழ்கின்ற சமுதாயத்தின், யதார்த்த வாழ்வில் மனிதனின் சுயநலம், பணத்தாசை, வெளிவேஷம் ஆகியவை படம்பிடித்துக் காட்டப்பட்டன. பிறகு அன்றாட வாழ்வில் விஞ்ஞான வளர்ச்சியின் போக்கை அணுகும் முறையும் தோன்றின.

N|ETZSCHE மற்றும் DOSTO|EVSKY போன்ற சிந்தனையாளர்கள், பகுத்தறிவு எதைக் காட்டுகிறதோ அதற்கு நேர் எதிரான போக்கே மனிதனின் உள்ளுணர்வில் ஊறிக்கிடக்கிறது எனக் காட்டினர். சில எழுத்தாளர்கள், ஏவல், பில்லிசூன்யம், பேய்களின் அமானுஷ்ய சக்தி ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டு அவற்றை ஆராயத் தொடங்கினர். சிலர் தெய்வ நம்பிக்கையும் மதவழி வாழ்க்கையுமே இந்நிலைக்குத் தீர்வாக அமையுமென்று எண்ணினர்.

நாடகத்துறையில், நூற்றாண்டு தொடக்கத்தில் கட்டுப்பாடுகளைத் தகர்த்து, கற்பனையில் கண்ட காட்சிகளை அப்படியே மேடையில் நடித்து, பார்ப்பவர்களை வியக்க வைத்தது புனைவியல் இலக்கியம். பிறகு சமுதாய சீரழிவுகளையும், மனிதனின் கீழ்மைகளையும், சுயநலப்போக்கையும் எள்ளி நகையாடின நகைச்சுவை நாடகங்கள். பெல்ஜிய எழுத்தாளர் Maeterlink 'கவிதைநாடகத்துக்கு' வழி வகுத்தார். இதில் சம்பவங்களுக்கோ, பாத்திரங்களின் மனோதத்துவத்திற்கோ இடமில்லை. நாடகம் காணும் கவிதையாகவும், குறியீடுகள் கொண்டதாகவும் இருந்தது.



இலக்கியத்திறனாய்வு ஒருதனி இலக்கியவகையின் மதிப்பை அடைந்து, படைப்புகளை உரசிப் பார்த்து அவற்றின்தரத்தை எடைபோடத் தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் அகில உலக அளவில் ஓர் உன்னதமான பரிசை நிறுவிப் படைப்பாளிகளை ஊக்குவிக்க விழைந்தார் நொபேல் எதும் பேரறிவாளர்.

நூற்றாண்டு இறுதியில் பிரமிப்பூட்டும் விஞ்ஞானக்கண்டு–பிடிப்புகள் சமுதாய வாழ்க்கை முறையில் பல அடிப்படை மாறுதல்களைத் தோற்றுவித்திருந்தன. சில எழுத்தாளர்களின் கற்பனையில் தோன்றியவற்றை எல்லாம் நிஜமாக்கிக் காட்டியது தொழில் நுட்பம். அதுமட்டுமன்றி, அறிவியல் மனித இனத்தையே அழிக்கவல்ல ஆயுதங்களைக் கண்டுபிடித்து அவற்றை மனிதன் கையிலேயே ஒப்படைத்தும்விட்டது. நூற்றாண்டுத் தொடக்கத்தில் எழுந்த கேள்வி அறிவியலா? மதமா? மானுடமா? இதில் இலக்கியம், கலை ஆகியவற்றின் பங்கு என்ன?

இரண்டு உலகப்போர்கள் இருபதாம் நூற்றாண்டின் முதற்–பகுதியில், மனித நாகரிகத்திற்குச் சவாலாய் வெடித்தன. யுத்தப் பேரழிவுகளும் Concentration Camp கொடுமைகளும் மானுடத்தை நம்பிக்கை இழக்கச் செய்தன. போரபாயம் பேரபாயமாய், இருண்ட மேகமாய் உலகவானைச் சூழ்ந்திருந்தது. அடுத்த போர் எந்த நேரமும் வெடிக்கக்கூடும். அப்படி அது வெடிக்கும்போது அதில் பயன்படுத்தப்படும் பயங்கர அணு ஆயுதங்கள் மனித இனத்தையே பூண்டோடு அழித்து விடக்கூடும் எனும் பயம் இருபதாம் நூற்றாண்டு மனிதனை எந்நேரமும் மிரட்டிக் கொண்டிருந்தது. இப்போர்களில் ஃபிரான்ஸ் நாட்டுக்கு நேரடித் தொடர்பும் பாதிப்பும் உண்டு. அத்தகைய மன அழுத்தம் தரக்கூடிய சூழ்நிலையில் ஃபிரஞ்சு இலக்கியம் நோபல் பரிசு பெறத் தகுதியான பதினான்கு எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கிறது என்பது அவ்விலக்கியத்தின் பெருமைக்கும் செழுமைக்கும் சான்று. அது சென்ற பாட்டையைச் சித்திரிக்கும் பெரும் பணி ஃபிரஞ்சுஇலக்கிய இருபதாம் நூற்றாண்டு வரலாற்றைச் சேர்ந்தது.

❋ ❋ ❋